டிரினிடி மகளிர் கல்லூரி,
நாமக்கல்- 637002.
தமிழாய்வுத்துறை

# அகப்பொருள் இலக்கணம்

வழங்கியவர்

திருமதி.க.பாரதி

உதவிப் பேராசிரியர்
தமிழாய்வுத்துறை

HTTP://WWW.TRINITYCOLLEGENKL.EDU.IN/

# அகப்பொருள் இலக்கணம்

ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையே ஏற்படும் காதல் உணர்வை மையமாகக் கொண்டு அகப்பொருள் இலக்கணம் அமைந்துள்ளது

# அகப்பொருள் திணைகள்

1.குறிஞ்சித்திணை
2.முல்லைத்திணை
3.மருதத்திணை
4.நெய்தல்திணை
5.பாலைத்திணை

# அகப்பொருள் இலக்கணம்

1.முதற்பொருள்

1.கருப்பொருள்

1.உரிப்பொருள்

# முதற்பொருள்

தமிழ் இலக்கணத்தில் **முதற்பொருள்** என்பது சொற்களினால் உணரப்படும் மூன்று பொருள் வகைகளுள் ஒன்றாகும்.கருப்பொருள், உரிப்பொருள் என்பன ஏனைய இரண்டு வகைகள். முதற்பொருள் இருவகைப்படும். இவை காலம், நிலம் என இருவகைப்படும். "நிலம்" என்பதனுள் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐந்தும், "காலம்" என்பதனுள் மாத்திரை, நாழிகை, யாமம், பொழுது, நாள், பக்கம், திங்கள், இருது, அநயம், ஆண்டு, உகம் என்னும் பலவகையானவையும் அடங்கும்

# நிலம்

தொல்காப்பியம் காடு, நாடு, மலை, கடல் என நான்கு வகை நிலங்களைக் குறிப்பிடுகிறது. தமிழ் இலக்கணத்தில் இவை ஐந்து திணைகளாக வகுக்கப்பட்டுள்ளன. இவை நிலத்திணைகள் எனப்படுகின்றன. இவற்றுள்,

1.மலையும் மலை சார்ந்த நிலமும் குறிஞ்சி எனப்படும்.
2.காடும் காடுசார்ந்த நிலமும் முல்லை எனப்படும்.
3.வயலும் வயல் சார்ந்த நிலமும் மருதம் எனப்படும்
4.கடலும் கடல் சார்ந்த நிலமும் நெய்தல் எனப்படும்.
5.மணலும் மணல் சார்ந்த பகுதிகளும் பாலை எனப்படும்.

# காலம்

காலம் அல்லது பொழுதை பெரும் பொழுது, சிறு பொழுது என இரண்டு பெரும் பிரிவுகளாகத் தமிழ் இலக்கணம் வகுத்து உள்ளது.

•பெரும்பொழுது: கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், வேனில் என அறுவகை.

•சிறு பொழுது: மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல், பிற்பகல் என்பன.

# நன்றி

http://www.trinitycollegenkl.edu.in/